பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 24 | புதன்கிழமை | 09.08.2023 | கதிர் 271

# அசல் 13ஐ அப்படியே செயற்படுத்துங்கள்

## ஜனநாயகக் கூட்டணி ஜனாதிபதிக்குக் கடிதம்

**ஜே.ஆர். காலத்தில் ஆறிலைந்து பெரும்பான்மையுடன்நிறைவேற்றப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டத்தின் அசல் வடிவத்தை அவ்வாறே நடைமுறைப்படுத்துமாறு கோரி ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணி தனது முன்மொழிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளது.**

**இந்தமுன்மொழிவானதுஜனாதிபதியின் நாடாளுமன்றஇணைப்பாளர்பேராசிரியர் ஆசு மாரசிங்கவிடம், கூட்டணியின் பங்காளித் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சித்தார்த்தன் ஆகியோரால் கையொப்பமிடப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.**

**அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

**13ஐ செயல்படுத்துவது குறித்த கருத்துக்கள்மற்றும்முன்மொழிவுகளை சமர்ப்பித்தல் சம்பந்தமாக நாங்கள் ஐந்து அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டணியாக மேற்கூறியவை தொடர்பாக உங்கள் கடிதத்தை**

☞2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்கான போட்டி நடந்து கிட்டத்தட்ட ஒரு மாத காலம் ஆகின்றது. ஆனால் இன்னும் புதிய துணைவேந்தர் நியமனம் செய்யப்படவில்லை. ஜூலை 12 அன்று கூடிய யாழ். பல்கலைக்கழகப் பேரவை போட்டியாளர்கள் நால்வரில் இருந்து மூவரைத்அடுத்ததுணைவேந்தர்பதவிக்குத் தகுதியானவர்களாகத் தெரிவு செய்தது. தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, பேராசிரியர் வேல்நம்பி, பேராசிரியர் கண்ணதாசன் ஆகியோர் புள்ளிகள் அடிப்படையில் முறையே தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த மூவரில் ஒருவர் துணைவேந்தராக நியமிக்கப்படலாம். அதிக புள்ளிகள் எடுத்தவரைத்தான் ஜனாதிபதி நியமனம் செய்யவேண்டும் என்ற நியதியில்லை. மூவரில் எவரையும் தன் விருப்பப்படி நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அப்படியிருந்தும் இன்னும் நியமனம் நடக்கவில்லை. கிட்டத்தட்ட ஒரு மாத காலம் ஓடிப்போய்விட்ட நிலையிலும் நியமனத்திற்கான அறிகுறிகளைக் காணமுடியவில்லை. யாழ்ப்பாணப்

☞2

## இஸ்ரேலுக்கு தொழிலாளர்கள் அனுப்பப்படுவது விரைவு

இஸ்ரேலில் பராமரிப்புத் தொழிலுக்காக தகுதிபெற்ற 22 பேருக்கு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷநாணயக்காரவினால்நேற்றுவிமானப் பயணச்சீட்டுக்கள் வழங்கப்பட்டன,

இந்த ஆண்டில் இஸ்ரேலில் பராமரிப்பு பணிக்காக அனுப்பப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 241ஆகும். இதில் 33 ஆண் தொழிலாளர்களும் 208 பெண்

## அரச துறைகளில் திருட்டைத் தடுக்க டிஜிட்டல் மயமாக்குவதே ஒரே வழி

### அமைச்சர் பந்துல கருத்து

அனைத்து அரச துறை நிறுவனங்களிலும் இடம்பெறும் திருட்டு, முறைகேடுகள், ஊழல், மோசடிகளைத் தடுப்பதற்கு அரச துறையை டிஜிட்டல் மயமாக்குவதே ஒரே வழி என்று அமைச்சரவைப்பேச்சாளரும்பொதுமக்கள் ஊடகத்துறை அமைச்சருமான, கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிப்பதற்காகச்செய்தியாளர்களைச் சந்தித்தபோதுஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்தியக்கடன்திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் 500 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன, புதுப்பிக்கப்பட்டு வரும் 400 பஸ்களில், இதுவரையிலும் 175 பஸ்கள்; சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஆனால் பயணிகள் டிக்கெட் மூலம் இலங்கை போக்குவரத்து சபைக்கு

☞2

## வறட்சியால் கிளிநொச்சி குளங்கள் பலவற்றில் சொட்டுத் தண்ணீரில்லை



நாட்டில்ஏற்பட்டுள்ளகடும் வறட்சிகாரணமாககிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல குளங்களில் ஒரு சொட்டுத் தண்ணீரில்லை என்கிற நிலை ஏற்பட்டுள்ளது. நீர்நிலைகள்முற்றும்முழுதாக வற்றியதன் காரணமாக கால்நடைகள் தண்ணீரைப் பெறுவதற்கு அலைந்து திரிகின்றன என்று கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்தனர்.

அத்துடன் இப்பகுதிகளில் உள்ள அனேகமான கிணறுகளிலும் தண்ணீர் முற்று முழுதாக வற்றியுள்ளதாகவும் ஒருவருடமும் இல்லாதவாறு இவ்வருடம் வறட்சிவாட்டுகின்றதுஎனவும் மக்கள் தெரிவித்தனர்.

☞2

## மீண்டும் ஒரு அரகலயவுக்கு ஊடக நிறுவனங்கள் முயற்சி

விவசாயிகளின் கோபத்தினைப் பயன்படுத்தி மீண்டும் மக்கள் அரகலயவை ஏற்படுத்துவதற்கு ஊடக நிறுவனங்கள்உட்படசிலதரப்புக்கள் முயற்சிப்பதாக ஜனாதிபதிக்கு புலனாய்வுத் தரப்புக்களால் அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஏற்பட்டுள்ள மின்சாரம் மற்றும் விவசாயத்துக்கான நீர் விநியோகம் ஆகிய விடயங்களையும், விவசாயிகளின் போராட்டத்தினையும் பயன்படுத்தி மீண்டும் நாட்டில் மக்கள் எழுச்சி என்ற பெயரில் அரகலய போராட்டத்தினை முன்னெடுப்பதற்கு திட்டமிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று இந்த தகவலை புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதிக்கு அறித்துள்ள நிலையில் அவர் அமைச்சரவை கூட்டத்தின்போது அதனைப் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

இந்தவிடயத்தில்இரண்டு ஊடகநிறுவனங்களும் திட்டமிட்ட வகையில்

☞2

## தண்ணீர் மற்றும் மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும்

### அமைச்சர் காஞ்சன உறுதியளிப்பு

நாட்டின் விவசாயிகளுக்கு நீர் மற்றும் மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும் எனவும்,நாட்டின்நலனுக்காக எடுக்க வேண்டிய எந்த முடிவையும் எடுக்க இன்றைய ஆட்சி தயங்காது எனவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சமனல நீர்த்தேக்கத்திலிருந்து உடவலவ நீர்த்தேக்கத்திற்கு விவசாய தேவைகளுக்காக நீர் திறப்பு இன்று (நேற்று) காலை தொடங்கப்பட்டுள்ளது. அதிகபட்ச கொள்ளளவிற்கு நீர் திறந்து விடப்படும்.

சமனல நீர்த்தேக்கத்திலிருந்து உடவலவ நீர்த்தேக்கத்திற்கு விவசாய தேவைகளுக்காக நீர் திறந்துவிட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன் காரணமாக ஒகஸ்ட் 15ஆம் திகதி முதல் சமனல குளம் நீர்த்தேக்கத்தின் மின்சார உற்பத்திநிறுத்தப்படலாம். ஆனால் தொடர்ந்து மின்சார விநியோகத்திற்கு தேவையான நடவடிக்கைகளை ஆளும் தரப்பு மேற்கொள் கின்றது - என்றார்.

## தீர்வுக்கான கதவுகள் திறந்தேயுள்ளன தமிழ்க் கட்சிகளுக்குள்தான் குழப்பம்

### இப்படிக் கூறுகின்றார் பிரசன்ன

'தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான கதவுகள் திறந்துள்ளன.ஆனால்,தமிழ்க் கட்சிகள்தான் குழப்பத்தில் உள்ளன. அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. அவர்கள் ஒன்றிணைந்துவந்தால்தான் அனைத்துக் கட்சிகளும் இணைந்துமூவினமக்களும் ஏற்கும்தீர்வைவென்றெடுக்க முடியும்.'

இவ்வாறு ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், 'அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் குறித்தும், அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பிலும் தமிழ்க் கட்சிகள் வெவ்வேறு நிலைப்பாடுகளுடன்உள்ளன. முதலில் அவர்கள் ஒன்றுபட வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் திறந்த மனதுடன் பேச அவர்கள் முன்வரவேண்டும். தீர்வு விடயத்தில் ஜனாதிபதி

☞2

## கொக்குத்தொடுவாய் புதைகுழியை தோண்ட வாரத்திற்கு 4 லட்சம் ரூபாய் செலவு மதிப்பீடு


(ந.லோகதயாளன்)

கொக்குத்தொடுவாய் புதைகுழிதோண்டுவதானால் ஏற்படும்செலவுவிபரத்தினை மாவட்டச் செயலகம் நேற்று அனுப்பி வைத்துள்ளது.

முல்லைத்தீவுமாவட்டம. கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப. புதைகுழியை தோண்டுவதற்கு ஏற்படும் செலவீனத்தை ஈடுசெய்வது தொடர்பில் ஆராயப்பட்டு அதனை காணாமல்ப் போனோர்அலுவலகம்வழங்க வேண்டும. என கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அதறகமைய புதை குழியை தோண்டுவதானால்ஏற்படும. செலவு விபரத்தினை சமர்ப்பிக்குமாறு காணாமல்ப் போனோர் அலுவலகம் கோரிக்கை விடுத்தது.

உத்தேச செலவு விபரத்தினை மதிப்பீடு செயத மாவட்டச் செயலகம் புதை குழியை வாரத்தில்

## நினைவேந்தல்





(பாறுக் ஷிஹான்)

1990 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 7 அம்பாறை பண்டாரதுவ கிராமத்தில் 30 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட 33ஆவது நினைவுதின நிகழ்வுகள் இடம்பெற்றன.

பண்டாரதுவபடுகொலை ஞாபகார்த்தமாக விசேட நினைவேந்தல் பண்டாரதுவ விமலராம விகாரையில் திங்கட்கிழமை இரவு இடம் பெற்றது

கிராம மக்களின் பங்களிப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் 1990 ஆம் ஆண்டுபடுகொலைசெய்யப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்

## மத்திய வங்கி முன்பாக நேற்று போராட முயன்ற 10 பேர் கைது

இலங்கை மத்திய வங்கி வளாகத்துக்குள் நேற்றுக் காலைபலவந்தமாகநுழைய முயன்றகுற்றச்சாட்டின்பேரில் குத்தகை மற்றும் கடன் கொடுப்போர் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட 10 பேரை கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பெண்ணும் 09 ஆண்களும் அடங்குவர்.

வங்கியில் பணம் வைப்புச் செய்பவர்களின் வட்டி 8 சதவீதம், குத்தகை வட்டி 28 சதவீதம், சிறு, குறு தொழில்துறையினரை அழித்தஇந்தவட்டிவிகிதத்தை குறைக்கவும், சட்டவிரோத வாகன கடத்தலை தடுக்கவும், சட்டத்தை அமல்படுத்தவும் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி மத்திய வங்கியில் போராட்டம் நடத்த முற்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலைகார குத்தகை நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இரண்டு வருடங்களாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு மத்திய வங்கி எவ்வித பதிலும் கிடைக்காத காரணத்தினால் இந்தப்

☞2

### பறளாய் முருகன் கோயில் விவகாரம்

## வர்த்தமானியை மீளப் பெறுங்கள் சிறிதரன் எம்.பி. ரணிலுக்கு கடிதம்

(ந.லோகதயாளன்.)

தமிழர்களின் பூர்வீக அடையாளங்களைஅபகரித்து வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்களை மீளப்பெறக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 188 இன் 16 ஆம் பிரிவின் கீழ், வடக்கு மாகாணத்திலுள்ள தமிழர்களின் நான்கு பூர்வீக மதத்தலங்களை புராதன நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள 2023.02.01 ஆம் திகதிய 2317/57ஆம்மற்றும்2317/58 ஆம் இலக்க, வர்த்தமானிப் பத்திரிகைஅறிவுறுத்தல்களை மீளப்பெறக்கோரியே நாடாளுமன்றஉறுப்பினர்சிவஞானம் சிறீதரனால், ஜனாதிபதிக்கும், துறைசார் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவுக்கும் தனித்தனிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

2023.08.07

☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

பல்கலைக்கழகத்திற்குப் பின்னர் துணைவேந்தர் தெரிவு இடம்பெற்ற வேறு சில பல்கலைக்கழகங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

இந்தத் தாமதத்திற்கு என்ன காரணம் என்று தேடினால், துணைவேந்தராக யாரை நியமிப்பது என்பதை முடிவு செய்ய முடியாத அளவிற்கு ஜனாதிபதிக்கு அழுத்தங்கள், பரிந்துரைகள் குவிகின்றன என்று அறிய முடிந்தது. தெரிவாகக்கூடிய மூன்று பேரில் இருவருக்கு அமைச்சர்கள் மட்டத்தில் இருந்து கடுமையான பரிந்துரைகள் கிடைப்பதும் ரணில்வ விக்கிரமசிங்கவை யோசிக்க வைத்துள்ளதாம். அந்த இருவரும் பல அமைச்சர்களை நாடியதன் காரணமாக அவர்களும் இவரையே நியமியுங்கள் என்று ஜனாதிபதிக்குப் பரிந்துரைகளைச் செய்திருக்கிறார்கள்.

இது மட்டுமாக இருந்தால் பரவாயில்லை. நியமனத்திற்கான பரிந்துரைகள் செய்யப்பட்டிருப்பது போன்றே இந்த இருவரையும் துணைவேந்தராக ஏன் நியமிக்கக்கூடாது என்பது தொடர்பிலும் பல கடிதங்கள், பெட்டிசங்கள், முறைப்பாடுகள் ஜனாதிபதி செயலகத்தில் குவிந்துள்ளனவாம். ஆளையாள் மாறி மாறி இப்படி மற்றவரை வீழ்த்த நடத்தும் காய்நகர்த்தல்களால் ஜனாதிபதி செயலகம் வேறு விழிபிதுங்கி நிற்கிறதாம்.

நன்றாய் இருக்கிறது யாழ்ப்பாணத்தில் உயர் கல்விக்கூட லட்சணம்.

இவற்றுக்கு மத்தியில் மண்டையை உடைத்து ஒருவரைத் துணைவேந்தராகத் தெரிவு செய்வதற்கு இப்போது ஒரு அவசரமும் இல்லை என்று விடயத்தை ஆறப்போட்டிருக்கிறார் ரணில். எனினும் விரைவில் துணைவேந்தர் ஒருவரை நியமனம் செய்யவேண்டும் என்கிற நிலையில், அனேகமாக இன்று அது தொடர்பில் அறிவிப்பு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வறட்சியால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலமடுகுளத்தில் புனரமைப்பு பணிகள் காரணமாகவே இம்முறை இப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதாகவும் இல்லாவிடில் ஒவ்வொரு வருடமும் இப்பகுதியில் உள்ள குளங்களுக்கு கல்மடுகுளத்தின் உள்ள நீர் விநியோகிக்கப்பட்டு வந்ததால் குளங்களில் நீர் இருந்ததாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக தோட்டப் பயிர்செய்கையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பயன்தரக்கூடிய பலவகை செடி கொடிகளும்

அழியும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அசல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கோள் காட்டி, எங்கள் கருத்துக்களைப் பின்வருமாறு முன்வைக்கவிரும்புகிறோம்.

1. ஏற்கனவே 1988இல் நாடாளு மன்றத்தில் 5/6 பெரும்பான்மையுடன் 13 பு அரஷமைப்பில் இணைக்கப்பட்டது.

2. அன்றிலிருந்து நாடு முழுவதிலும் மாகாண சபைகள் நிறுவப்பட்டு, தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்தலை நடத்துவதற்காகக் கலைக்கப் படும் வரை செயல்பட்டன.

3. எனவே ஏற்கனவே இருக்கின்றதானதும் அரஷமைப்பின் ஒருபகுதியாக இருப்பதானதுமான 13ஐ நடைமுறைப்படுத்துவதற்கு கருத்துக்களைக் கோர வேண்டிய அவசியமில்லை.

எவ்வாறாயினும், 13ஐ இன் கீழ் வழங்கப்பட்ட சில மாகாண சபை அதிகாரங்கள் திட்டமிட்ட வகையில் காலத்திற்கு காலம் அவ்வப்போது திரும்பப்பெறப்பட்டன.

மாகாண சபைகளில் இருந்து மீளப் பெறப்பட்ட அவ் அதிகாரங்களை மீண்டும் வழங்கி, காணி, பொலிஸ், நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்களுடன் 13 ஐ அதன் அசல் வடிவில் நடைமுறைப்படுத்த நாங்கள் முன்மொழிகிறோம் - என்னுள்ளது.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமானம் கிடைத்தால் தான் இந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும்.

மேலும் சிலர் செய்யும் முறைகேடுகளால் இலங்கை போக்குவரத்து சபைக்கு சரியான முறையில் வருமானம் கிடைப்பதில்லை.

இதனைத்தவிர்ப்பதற்காக மாத்தறை, காலி, மகும்புர இடையே நெடுஞ்சாலையில் நடத்துனர்கள் இன்றி பயணச் சீட்டுகளுடன் பல பயணச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனூடாக நாளாந்தம் சுமார் 5-6 இலட்சம் வருமானம் கிட்டியது.

ஆனால் பின்னர், கிடைக்கப் பெற்ற வருமானம் படிப்படியாகக் குறைந்தது. இதற்கான காரணங்களை ஆராயும் போது, குறிப்பிட்ட பயணங்களுக்கு பணம் செலுத்தாமை மற்றும் போலி பயணச் சீட்டுகளை வழங்கியமையினால் அந்த பணம் அரசுக்கு கிடைக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

போலி டிக்கெட்டுகளை அச்சடித்து பயணிகளை ஏற்றிச் செல்லல் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்து குற்றப்புலனாய்வுத்திணைக்களம் மற்றும் பொலிஸாரால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதன்படி, அரச துறையில் இடம்பெறுகின்ற திருட்டு மற்றும் ஊழலைத் தடுக்க, அரச துறைக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்களையும் டிஜிட்டல் மயமாக்குவது அவசியமாகும்.

உலகின் பிறநாடுகளைப் போல பயணிகளுக்கு இ-டிக்கெட்டுகளை வழங்குவதனூடாக, பொது மக்களுக்கு சிறந்த பேருந்து சேவையொன்றையும் வழங்க முடியும் என்றார்.k

## இஸ்ரேலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்களும் அடங்குகின்றனர்.

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் தலா 13 தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டதுடன், மார்ச் மாதம் 12 தொழிலாளர்கள் அனுப்பப்பட்டனர். ஏப்ரல் மாதம் 39 தொழிலாளர்களும், மே மாதத்தில் 34 தொழிலாளர்களும் அனுப்பப்பட்டனர். ஜூன் மாதத்தில் 40 தொழிலாளர்களும் ஜூலை மாதத்தில் 51 தொழிலாளர்களும் இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டனர். ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் மட்டும் 39 தொழிலாளர்கள் பராமரிப்பு பணிக்காக இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டனர்.

இஸ்ரேலில் பராமரிப்பு வேலைகளுக்கான பணியாளர்களை விரைவாக அனுப்புவது தொடர்பாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, கடந்த பெப்ரவரி மாதம் அந்நாட்டின் பீபா நிறுவனத்துடன் பேச் நடத்தினார். இலங்கையிலிருந்து பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதை துரிதப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இதன்போது உறுதி தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைவாக ஏப்ரல் மாதம் முதல் இஸ்ரேலில் பராமரிப்பு பணிகளுக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நடவடிக்கையை துரிதப்படுத்த முடிந்துள்ளது. இதுவரை 480 தொழிலாளர்கள் பராமரிப்பு தொழிலுக்காக இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர்வுகளைச் செய்து வருவதாகவும் தகவல்கள் உறுதியாகின்றன.

கடந்த ஆண்டு மே ஒன்பதாம் திகதி, 12 மணி நேரத்திற்குள் 72 மக்கள் பிரதிநிதிகளின் வீடுகளை எரித்துநாசமாக்குவதெனவும் 800இற்கும் அதிகமான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதெனவும் தீர்மானிக்கப்பட்ருந்தது. தற்போது அதன் தொடர்ச்சியாக விவாசாயிகளையும் மக்களையும் ஒன்றுதிரட்டி போராட்டத்தினை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இதில் எதிர்க்கட்சிகளும், ஏனைய சக்திகளும் பின்னணியில் இருந்து செயற்படுகின்றமையும் வெளிப்படையாகியுள்ளது. இந்த திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது - என்றார்.

## தீர்வுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுகின்றார். அவர் மீது எவரும் குற்றம் சுமத்த முடியாது.' - என்றார்.

## கொக்குத்தொடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5 நாள்கள் தொடர்ந்தும் தோண்டுவதானால் ஒரு வாரத்துக்கு ஏறபடும் செலவீனம் என்ற வகையில் செலவு விவரத்தினை தயாரித்து காணாமல்போனோர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர்.

இதறகமைய மொத்த செலவாக வாரத்துக்கு 3 லட்சத்து 62 ஆயிரம் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ஜே.சி.பி இயந்திரம் மற்றும் உணவு, போக்குவரத்துச் செலவுகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

## வர்த்தமானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் திகதியிட்டு, ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் வதிவிடப் பிரதிநிதி, சர்வதேச நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள், யுனெஸ்கோ மனித உரிமைகள் ஆணையகம் என்பவற்றுக்கு பிரதியிட்டு, ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பறாளை முருகன் ஆலயம் உள்ளிட்ட நான்கு இடங்களும் இன்றளவும் முறைசார் பூஜை வழிபாடுகள் இயற்றப்படும் தமிழ் மக்களுடைய புராதன மதவழிபாட்டுத் தலங்களாகப் பேணப்பட்டு வரும் நிலையில், எமது மக்களை உணர்வுரீதியான நெருக்கீடுகளுக்கு ஆளாக்கி இனத்துவ அடிப்படையிலான சிந்தனைகளைத் தூண்டும் நோக்கோடு மேற்படி மதத் தலங்களை புராதன நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தியுள்ளமை தமிழர்களது பூர்வீக நிலங்களை வலிந்து ஆக்கிரமிப்புச் செய்வதன் அதிஉச்சமான வெளிப்பாட்டு வடிவமாகவே தென்படுகிறது.

குறிப்பாக பறாளை முருகன் ஆலய பரிபாலன சபையினரிடமுள்ள 1786 ஆம் ஆண்டு எழுதப்பட்ட காணிஉறுதியில் அவ்ஆலய வளாகத்தினுள் அரச மரம் இருப்பதாகக் குறித்துரைக்கப்பட்டிராத நிலையில், சூழலியல் நிபுணர்களின் கருத்துக்கமைய வெறுமனே 200 ஆண்டுகளுக்குட்பட்ட பழமையுடைய அவ் அரச மரத்தை, சுமார் 2300 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்ததாக மகாவம்சம் கூறும் சங்கமித்தையின் வருகையோடு பொருத்திக் கூறுவதென்பது வரலாற்றுத்திரிபை ஏற்படுத்துவதாகவும், அப்பட்டமான பொய்மை நிறைந்த கருத்தாகவுமே அமைந்துள்ளது.

ஏற்கனவே, குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை முதல் உருத்திரபுரம் சிவன்கோவில், மயிலத்தமடு மாதவனை, கச்சல் சமளங்குளம் ஈறான நூற்றுக்கணக்கான இடங்கள் தொல்பொருள் எனும் போர்வையில் வலிந்து அபகரிக்கப்பட்டு, அவ்விடங்களில் எல்லாம் பௌத்த விகாரைகளும், துறவிமடங்களும், சிங்களக் குடியேற்றங்களும் திட்டமிட்டு நிறுவப்படும் சூழலில், தமிழர்களின் கலாசார மற்றும் மரபுரிமை அடையாளங்களின் தலைநகராக விளங்கும் யாழ்ப்பாண மண்ணிலுள்ள ஆலயங்களையும் அவற்றின் சுற்றயல் பகுதிகளையும் புராதனச் சின்னங்களாக அடையாளப்படுத்தியிருப்பதை, அவ்விடங்களை முற்றாக பௌத்த மயமாக்கும் சிந்தனையின் ஆரம்ப வெளிப்பாடென்றே கருதமுடிகிறது.

போர்க்கால நெருக்கீடுகள், போரியல் வாழ்வின் இழப்புகள் என்பவற்றில் இருந்து இன்றளவும் மீண்டெழ முடியாத நிலையில், ஈடுசெய் நீதி கூட மறுக்கப்பட்டவர்களாக வாழும் ஈழத்தமிழர்களை, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினதும் அதன் கீழியங்கும் தொல்லியல் திணைக்களத்தினதும் அண்மைக்கால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேலும் மேலும் பாதிப்புக்குள்ளாக்குவதாகவே அமைந்துள்ளன.

ஓர் மதவாதச் சிந்தனையின் பாற்பட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் இரு தேசிய இனங்களுக்கிடையிலான முரண்நிலைகளை மேலும் வலுப்படுத்தாது, தமிழர்களையும் இந்த நாட்டின் சகோதர இனத்தவர்களாகக் கருதி, அவர்களது வழிபாட்டுரிமைகளுக்கேனும் மதிப்பளிப்பதன் மூலம் இந்து மற்றும் கிறிஸ்தவ மதச் சின்னங்களையும், தமிழர்களது மரபார்ந்த அடையாளங்களையும் ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளை நிரந்தரமாக நிறுத்த இந்த நாட்டின் தலைவராக தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அதற்கான நல்லெண்ணச் சமிக்ஞையாக 2023.02.01 ஆம் திகதிய 2317/57 ஆம் மற்றும் 2317/58 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களை மீளப்பெற துறைசார் அமைச்சரை அறிவுறுத்துமாறும் தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்- என்றுள்ளது.

## மத்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் ஈடுபடவேண்டி ஏற்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

குத்தகை நிறுவனங்களுடன் இணைந்து பொலிஸாரும் மமம சட்டத்தையும் அதிகாரத்தையும் துஷ்பிரயோகம் செய்வதாகக் கூறிய ஆர்ப்பாட்டக்காரர்கள், கடந்த மாதத்தில் மாத்திரம் சுமார் ஆறாயிரம் வாகனங்கள் சட்டவிரோதமான முறையில் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

# உலர் உணவுப் பொருள்கள் வவுனியாவில் விநியோகம்



உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கிய மக்களுக்கான உலக உணவுத் திட்டத்தின் ஊடாக உலர் உணவு வழங்கி வைக்கும் நிகழ்வு வவுனியா புளியங்குளம் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது பண்டாரிக்குளம் கிராம சேவகர் பிரிவில் 392 குடும்பங்களுக்கு 50 கிலோ அரிசி, 20 கிலோ பருப்பு, 05 லீற்றர் பாம் ஒயில் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

அதேசமயம் வவுனியா பிரதேச செயலக பிரிவின் கீழ், நீண்ட காலமாக நோய்வாய்க்குட்பட்டவர்கள் , கணவனை இழந்த பெண்கள் , கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், இவ்வாறான ஆறு பிரிவுகளைச் சேர்ந்த 13 ஆயிரத்து 152 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் நா.கமலதாசன், திட்டமிடல் பணிப்பாளர் முகுந்தன், உதவி திட்டமிடல். பணிப்பாளர் பிறைசூடி மற்றும் அரச உயர் அதிகாரிகள் மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# பயிற்சி விமானங்கள் குறித்த விமானப்படையின் அறிவிப்பு

திருகோணமலை சீனன்குடாவில் இடம்பெற்ற பயிற்சி விமான விபத்தை அடுத்து (பி.ரி.-06) ரக அனைத்து விமானங்களையும் இயக்குவதை இலங்கை விமானப்படை இடைநிறுத்தியுள்ளது.

குறித்த விபத்து தொடர்பில்,விமானப்படைத் தளபதி எயார் மார்ஸல் உதேனி ராஜபக்ஷ தெரிவிக்கையில் -

விசேட விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன்,அந்த குழுவின் அறிக்கை கிடைக்கப்பெறும் வரையில், அந்த விமானங்கள் இடைநிறுத்தப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

(05)






காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாண ஆளுநரின் செயல்பாடுகள் ஏனைய மாகாணங்களுக்கு முன்னுதாரணம்

## ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு பிரதமர் பாராட்டு

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின், உணவு பாதுகாப்பு கூட்டம்கடந்தஇரண்டுநாள்களாகபிரதமர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர்செந்தில்தொண்டமான், அமைச்சர்கள், அந்தந்த மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துக்கொண்டனர்.

இதன்போது,ஆளுநர்செயலகத்துக்கு விஜயம் செய்த பிரதமர், செந்தில் தொண்டமான்ஆளுநராகபொறுப்பேற்று இரண்டுமாதகாலங்களில்முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக 700 ஆசிரியர் நியமனம், 5000 இளைஞர்களுக்கு தகவல் தொழிநுட்ப வேலைவாய்ப்பு, இந்தியஅரசிடமிருந்து 2371மில்லியன்ரூபா கடனற்ற நிதியுதவி, ஜப்பான் அரசுடன் இணைந்து அருகம்பேவில் உலாவுதல் ஆரம்பித்தல், சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரித்தல், கிழக்கு மாகாணத்திற்கு முதல் முறையாக கோர்டிலா குரூஸ் கப்பலை வரவழைத்தமை, ஆயிரத்திற்கும் மேற்பட்ட காணி உரிமை பெற்றுக்கொடுத்தமை, பீச் கிளீனிங் வேலைத்திட்டத்தின் ஊடாக ஐம்பதாயிரம் பிளாஸ்டிக் கழிவு பொருள்கள், ஒரு லட்சம் பிளாஸ்டிக் அல்லாத கழிவு பொருள்கள் அகற்றப்பட்டு கடற்கரைகள் சுத்தம்செய்யப்பட்டமை, சட்ட ஒழுங்கை சீராக செயற்படுத்தல் போன்ற பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை குறுகிய காலத்தில் வெற்றிகரமாக முன்னெடுத்தமைக்கு பாராட்டுக்களை தெரிவித்ததுடன், ஆளுநர் மத சார்பற்ற வகையில் நியாயமான முடிவுகளை அனைவருக்கும் உதவும் வகையில் செயற்படுகிறார் எனவும் அறியகூடியதாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும் மட்டக்களப்பு மாவட்ட மீளாய்வு கூட்டத்தில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், மாவட்ட ஒருங்கிணைப்புகூட்டத்தில்நியாமான விடயங்கள் புறக்கணிக்கப்பட்டன. மக்கள் பிரதிநிதியாக குரல் எழுப்பியும் எந்த பிரச்சினைகளுக்கும் தீர்வுஎட்டப்படவில்லை, ஆனால் ஆளுநராக செந்தில் தொண்டமான் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ஓரளவேனும் நியாயமான முறையில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடத்தக்கூடியதாக உள்ளது என சுட்டிக்காட்டினார். (05)



## நடத்தைகெட்டு நடந்தார் சமுர்த்தி அலுவலர் கைது




ஆணுறுப்பை வட்அப்ஸ் செயலியின் ஊடாக குடும்ப பெண்ணிற்கு காட்டி தையல் மெசின்உட்படசலுகைகள் பல தருவதாக கூறி பாலியல் தொந்தரவு மேற்கொண்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரைசாய்ந்தமருதுபொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் வசிக்கின்ற 2 பிள்ளைகளின் தாயான குடும்ப பெண்ணிடம் பல சலுகைகளை பெற்று தருவதாக ஆசை வார்த்தைகள் கூறி தனது ஆணுறுப்பைப் புகைப்படம் எடுத்து குடும்பபெண்ணின் வட்அப்ஸ் செயலியின் ஊடாக குடும்பபெண்ணின் கைத்தொலைபேசிக்கு தொடர்ச்சியாக அனுப்பி பாலியல் சேட்டை செய்து வந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்பான முறைப்பாடு ஒன்று திங்கட்கிழமை கிடைக்கப்பெற்றிருந்தது.

இதற்கமைய சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத்தடுப்புபிரிவுபொறுப்பதிகாரி எம்.ஐயூப் தலைமையிலான பொலிஸார் விசாரணை மேற்கொண்டு சந்தேக நபரான 41 வயது மதிக்கத்தக்க சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை கைது செய்துள்ளனர்.

மேலும் சந்தேகநபரான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பல்வேறு திருமணங்கள் மேற்கொண்டுள்ளதுடன் இவ்வாறு பல்வேறு கணவன் அற்ற பெண்கள் மற்றும் தனிமையில் உள்ள பெண்களை நாடி தனது இச்சைக்காக ஆசை வார்த்தைகளை கூறி பாலியல் இலஞ்சம் பெற்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதான சந்தேகநபரை செவ்வாய்க்கிழமை கல்முனைநீதிவான்நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

## பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு வாக்காளர் பதிவு பற்றி ஆராய்வு





பெரியநீலாவணைமுஸ்லிம்பிரிவு மக்களுடன்அந்தப்பிரதேசத்தில்புதிதாக உருவாக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர்பிரிவில்வாக்காளர்களைபுதிதாக பதிவு செய்வது தொடர்பிலானதும், மற்றும் அவசர நடவடிக்கைகள் தொடர்பிலானதுமானகலந்துரையாடல் கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி தலைமையில் பெரியநீலாவணை கமு/கமு/ புலவர்மணிசரிபுதீன்மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்றஉறுப்பினர்சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரிஸ், கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கிப், பெரியநீலாவணை கமு/கமு/ புலவர்மணி சரிபுதீன் மகா வித்தியாலய அதிபர் ஏ.எல். அன்சார், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் சாலி, பள்ளிவாசல் தலைவர், பொதுமக்கள் எனபலரும் கலந்து கொண்டனர்.

பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவுபொதுமக்கள்தாம்எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், நிரந்தரமாக பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவில் வாக்காளர்களாகத் தம்மைப் பதிவுசெய்துதர நடவடிக்கைஎடுக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

புதிதாக உருவாக்கப்பட்ட அந்தக் கிராம உத்தியோகத்தர் பிரிவில் வாக்காளர்களை புதிதாக பதிவு செய்வது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவருடன் பேசி உடனடி நடவடிக்கை எடுப்பதாக மக்களுக்கு உறுதியளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரிஸ், அம்பாறை மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் இந்த விடயம் தொடர்பில் முன்னடுத்துள்ள நடவடிக்கை தொடர்பிலும் பொதுமக்களுக்கு விளக்கினார். மேலும் பல பெரியநீலாவணை முஸ்லிம்பிரிவின் அவசிய விடயங்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. (05)

## கல்முனை வலய பாடசாலைகளுக்கு ரூ.11 லட்சம் பெறுமதியான நூல்கள்

### ஆசிய மன்றத்தால் வழங்கி வைப்பு



இலங்கை ஆசிய மன்ற பூரண அனுசரணையில் நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, கல்முனை தமிழ், சம்மாந்துறை கோட்டங்களை சேர்ந்த பாடசாலைகளுக்கு சுமார் 11 லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை வாசிகசாலை மற்றும் மாணவர்களுக்கான கடந்த கால வினாப்பத்திர தொகுப்பு நூல்கள் ஞாயிற்றுக்கிழமை மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

ஆசியமன்றமுன்னாள்நிகழ்ச்சித்திட்ட ஆலோசகரும், இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனம் மற் றும் சி.ஜி.ஐ. நிறுவனம் ஆகியவற்றின் நிகழ்ச்சித்திட்ட ஆலோசகருமானஎம்.ஐ.எம். வலீத், இலங்கை ஆசிய மன்றத்திடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய 16 பாடசாலைகளுக்கு இந்த நூல்கள் அவரின் தலைமையில் ஆசிய மன்ற புத்தகங்கள் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் அன்டன் டீ நல்லதம்பியின் பிரசன்னத்துடன் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். எஸ். நஜீம் விசேட அதிதியாக கலந்து கொண்டதுடன் மற்றும் அதிதிகளாக கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ், நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரி எம். சரிபுதீன், காரைதீவு கோட்டக்கல்வி அதிகாரி ஜே. டேவிட், கல்முனை தமிழ் பிரிவு கோட்டக்கல்வி அதிகாரி எஸ். சரவணமுத்து , பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகளின் அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், ஆசிய மன்ற அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)

## கஞ்சா செடியை வளர்த்த நபர் ஒருவர் ஹற்றனில் கைதானார்

ஹற்றன்பொலிஸ்பிரிவுக்குஉட்பட்டதரவளைதோட்டத்தில், கஞ்சா செடியை வளர்த்த சந்தேக நபர் ஒருவரை, ஹற்றன் பொலிஸார், கைது செய்துள்ளனர்.

ஹற்றன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, குறித்த சந்தேக நபரின் வீட்டுப் பகுதியை சுற்றி வளைத்த பொலிஸார், அங்கு தேடுதலில் ஈடுபட்டபோது, பூந்தோட்டத்தில் வளர்க்கப்பட்ட இரண்டரை அடி உயரமான ஒரு கஞ்சா செடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, இவரை ஹற்றன் நீதிவானிடம் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக, ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். (05)

## ஈஸ்டன் ரி-10 பிளாஸ்ட் கடின பந்து கிரிக்கெட்

### பிளைங் ஹோர்ஸ் வி.க.சம்பியன்






கல்குடா’டோன்டச்’ விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 32 முன்னணிக் கழகங்கள் கலந்து கொண்ட ஈஸ்டன் ரி-10 பிளாஸ்ட் கடின பந்து கிரிக்கெட் சமர் சுற்றுப் போட்டியை மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்தியது.

இப்போட்டி ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் சம்மாந்துறை விளையாட்டுக் கழகமும் சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சையில் இறங்கின.

முதலில் துடுப்பாடிய சம்மாந்துறை அணியினர் 10 ஓவர்களின் முடிவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றன. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் 09 ஓவர்களில் 05 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி பெற்று சம்பியனானது.

இந்தப் போட்டியில் மிகச்சிறப்பாகத் துடுப்பாடிய முஹம்மட் றிபான் ஆட்டமிழக்காமல் 66 (26) ஓட்டங்களைப் பெற்றதுடன் 17 பந்துகளில் 51 ஓட்டங்களை மிக வேகமாகக் குவித்த இவர் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட அதே வேளை, போட்டித் தொடர் நாயகனாகவும் சிறந்த பந்து வீச்சாளராகவும் எஸ்.எம்.சுஜான் தெரிவு செய்யப்பட்டார்.

சம்பியனான சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கான கிண்ணம் பரிசில்களை பிரதம அதிதி சட்டத்தரணி எம்.எம்.எம்.றாசீக்கால் வழங்கி வைக்கப்பட்டன. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புனைவுகளின் இருப்பிடமான தொல்லியல் திணைக்களம்

பறளாய் முருகன் ஆலயத்தில் இருக்கும் ஆலமரம் தொல்லியல் திணைக்களத்தினால் திடீரென பாது காக்கப்படும் தொல்பொருளாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளமை தமிழர்கள் மத்தியில் பதற றத்தை ஏற்படுத்தியுள்ளது. எந்த ஆய்வுகளும், ஆதாரங்களும் இன்றி இலங்கை தொல்பொருள் திணைக்களம் பௌத்தத்தை மையப்படுத்தி மட்டுமே – அரசியல் நோக்கத்தோடு – இயங்குகின்றது என்பதற்கு இதுவொருசிறந்தசான்று. இத்தகையஒருதிணைக்களம் இலங்கையில் வரலாற்று ஆய்வுகளுக்குப் பொறுப்பாக இருப்பது பெரும் சாபக்கேடு.

பறளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரம், இலங்கைக்கு வருகை தந்த அசோகச் சக்கரவர்த்தி யின் மகள் சங்கமித்தையால் நடப்பட்டது என்கிற காரணத்தாலேயே அது தொல்பொருள் இடமாக அறிவிக்கப்பட்டிருப்பதாகக் காரணம் கூறப்படுகின்றது. இலங்கையின் பௌத்த வரலாற்றுக் கதைகளின்படி சங்கமித்தை இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வந்தார் என்று கொள்ளப்படுகின்றது. பறளாயில் உள்ள அரச மரத்திற்கு அத்தனை வயது வருமா என்பதை ஆய்வு செய்து உறுதிப்படுத்துவது ஒன்றும் சிரமமான காரியமல்ல. அதற்காகப் பெரும் அகழ்வாய்வுகள் எதுவும் செய்யவேண்டிய அவசியமும் இல்லை.

அந்தக் கோயிலுக்கும் ஆயிரக்கணக்கான வயசும் கிடையாது. அதுவொரு வரலாற்றுத் தொன்மை வாய்ந்த ஆலயமும் அல்ல. 18ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதொரு ஆலயம். அதற்கு முன்னர் இருந்து அங்கு அந்த அரச மரம் இருப்பதாயின் – அதுவும் சங்கமித்தையால் வைக்கப்பட்ட வெள்ளரசு மரம் இருந்ததாயின் அங்கு பௌத்த வழிபாட்டுக்கான வாய்ப்புகளும் இருந்திருக்கும். வெள்ளரசு மரத்தை பௌத்தர்கள் புனித மரமாக வழிபட்டுவரும் நிலையில் சங்கமித்தை நட்டுவைத்த மரத்தையண்டி பௌத்த வழிபாடுகள் இடம்பெற்றிருந்திருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு. அங்கிருப்பது சங்கமித்தை நட்ட மரம்தான் என்றால் அந்த இடத்தில் அகழ்வாய்வுகள் மேற்கொண்டு, அதற்கான சான்றுகளை, ஆதாரங்களைப் பெற்றிருக்க முடியும். ஆனால், தொல்பொருள் திணைக்களம் அதற்கான எந்தவொரு முயற்சியையும் எடுக்கவில்லை.

யாரோ சொன்ன கட்டுக்கதைகளை நம்பிக்கொண்டு – அங்கிருப்பது சங்கமித்தை போதி – எனச் சொல் லப்படுவதான செவி வழிக் கதையை நம்பிக்கொண்டு அதனை தொல்பொருள் இடமாக அரச அறிவிப்பை தொல்பொருள் திணைக்களம் விடுத்திருப்பது நகைப்புக்குரியது. வரலாற்றை அந்தத் திணைக்களம் அணுகுகின்ற விதம் குறித்த கேள்வியையும் அதனது நம்பகத்தன்மை குறித்த கேள்வியையும் இது பலமாக எழுப்புகின்றது. இலங்கை தொல்பொருள் திணைக்களம் இலங்கையில் பௌத்த சிங்களவர்கள் மட்டும் இருந்தார்கள் என்தபற்கான பொய்யாதாரங்களை நிறுவுவதற்கான கண்மூடித்தனமான முயற்சியில் – அரசியல் சார்ந்து செயற்படுகின்றது என்பதற்கு இது மிகப் பெருத்தமான மற்றும் தனித்துவமான சான்று.

வரலாறும் முழுவதும் இந்தத் திணைக்களம் இதுபோன்றே செயற்பட்டிருக்கின்றது. வடக்கு கிழக்கில் பௌத்தம் குறித்த எந்தவொரு விரிவான ஆய்வுகளையும் நடத்தாமல், குறிப்பாக வடக்கு கிழக்கில் தமிழ் பௌத்தம் இருந்தது என்று கூறப்படுவது தொடர்பில் எந்தவொரு ஆய்வும் நடத்தாமல் – ஆதாரங்களைத் திரட்டாமல் – பௌத்த அடையாளங்கள் பெறப்படும் இடமெல்லாம் சிங்கள பௌத்த பூமி என்கிற வகையில் கோட்பாடுகளை முன்வைத்துவரும் தொல்லியல் திணைக்களம் – பறளாயில் சங்கமித்தை நட்ட அரச மரம் என்கிற கட்டுக்கதையை நம்பியதைப் போன்றே நடந்துகொண்டிருக்கும் என்பதை நம்புவது கடினமல்ல.

வரலாறு என்பது கதைகளிலும் புனைவுகளிலும் வாழ்வதுஅல்லதுஅது சான்றுகளிலும் ஆதாரங்களிலும் தங்கியிருப்பது என்பதை புரியாத ஒரு அமைப்பு எப்படித் தொல்லியல் திணைக்களமாகமுடியும். அது பௌத்த சிங்கள அரசியல் நிறுவனமாகத்தான் இருக்கமுடியும்.

# கற்பகதரு எனும் அற்புதம்

## ஏடு தத்திட்ட எங்கள் பனை

அங்கம் – 8



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

அசல்பிரதி, அச்சடியோலை, இசையோலை, இணக்கோலை, ஏடகம், ஏட்டுப்பொறி, ஒற்றுதல், ஓலைத்தூக்கு, ஓலைநாயகம், ஓலைபோக்குதல், ஓலைப் பாசுரம், ஓலை வாரி, கணக்கோலை, கம்பை, கம்பை கட்டுதல், கா ணா ட்டு, குறிப் போலை, சட்டோலை, சந்திர கம், சரவை, சரசுவதி பண்டாரம், சிக்குப் பலகை , நீட்டு, நெட்டோலை, பையோலை, பொறியொற்றோலை, முறிப்பத்திரம், வெள்ளேடு , வெள் ளோலை, என்று - இங்கே சொல் லப்பட்ட அத்தனையும் கற்பகதருவாம் பனையுடன் இணைந்தேஇருக்கின்றன என்பது கருத்திருத்த வேண்டியதே. பனைக்கும் இங்கே காட்டப்பட்ட சொற்களுக்கும் என்ன தொடர்பு என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா ! அத்தனையும் பனையின் ஓலையால் வந்த சொற்களேயாகும்.

ஓலையினால் உருவான ஏடு பற்றிப் பார்த்தோம். அந்த ஏட்டுக்கும் இந்தச் சொற்களுக்கும் மிகவும் நெருக்கம் என்றுதான் சொல்லுதல் வேண்டும். அசல், பிரதி , என்றால் ஓலையில் எழுதப்பட்ட முதற் பிரதியா கிறது. அச்சடி ஓலை என்பது முத்திரை இடப்பட்ட ஓலையினைக் குறிப்பதாகும். இசையோலை எனும் பொழுது ஒப்பந்த ஓலையும், இணக்கோலை எனும் பொழுது உடன் படிக்கை ஓலையும் என்னும் கருத் தும் வந்து நிற்கிறது. ஏடகம் என்றால் பனை என்றும், பலகை என்றும் கருத்தாய் அமைகிறது. ஏட்டுப் பொறி என்றால் ஓலையில் பதிக்கும் முத்திரைக்குப் பெயராகும். ஒற்றுதல் என்பதற்கும் ஓலையில் முத்திரை இடல் என்பதும் கருத்தாய் அமைகிறது.

சீட்டுக் கவி எழுதிக் கொடுப்பதை ஓலைத் தூக்கு என்று அழைத்தனர். தலைமை அமைச்சராக இருப் பவரை ஓலைநாயகம் என்றும், ஓலையில் செய்தி அனுப்புதலை ஓலைபோக்குதல் என்றும் சொன் னதாக அறிய முடிகிறது. கடிதச் செய்திகளை அனுப்பியதை ஓலைப்பாசுரம் என்று கூறினார்கள். பொருத் தமாய் ஓலைகளைத் தேர்ந்தெடுத்து அதனை வாருவதற்கு பயன்படுத்தும் கருவியான கத்திக்கு ஓலை வாரி என்று பெயரிட்டழைத்தார்கள்.

கணக்குகளை எழுதி வைத்த ஏடுகளை கணக்கோலை என்றார்கள். ஓலையினால் ஆகிய ஏட்டுச் சுவடிக ளின் சட்டங்களுக்கு கம்பை என் றும் , சுவடிகளைக் கட்டுவதை கம்பை கட்டுதல் என்றும் அழைத்திருக்கிறார்கள். ஏட்டுக்கு ஏற்ப ஓலைகளை நறுக்கி எடுப்பதை காணா ட்டு என்றும் , கணக்குகள் எழுதப்பட்ட ஓலையினை குறிப்போலை என்றும் அழைத்திருக்கிறார்கள்.

சட்டோலை என்றால் சட்டம்



எழுதுவதற்கு பயன்பட்ட ஓலையாகும். எழுதிய ஓலையினை வைப்பதற்கு பயன்படுத்திய ஓலையின் உறைச் சுருளை சந்திரகம் என்னும் பெயரால் அழைத்திருக்கிறார்கள். எழுத ப்பட்ட ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் இடத்துக்கு சரஸ்வதி பண்டாரம் என்று பெயரிட்டமை சிறப்பாய் இருக்கிறதல்லவா ! எழுதிய ஓலைச் சுவடிகளைப் படிப்பது தானே முக்கியம். படிப்பதற்கு ஏடுகளை வைக்க ஒரு பலகையினைப் பயன்படுத்தியதை அறிய முடிகிறது. அப்படி அமைந்த அந்தப் பல கையைத்தான் சிக்குப்பலகை என்று பெயரிட்டிருக்கிறார்கள். திருமுக ஓலையினை நீட்டு என்று அழைத்தார்கள். நெட்டோலை என்றும் திருமுகத்துக்கு இன்னுமொரு பெயரினையும் கொடுத்தி ருக்கிறா ர்கள். பச்சை ஓலையினை பையோலை என்றும் , முத்திரை ஓலை யினை பொறியொற்றோலை என்றும் அழைத்திருக்கிறார்கள். ஓலையில் எழுதப்பட்ட பத்திரத்தை முறி ப்பத்திரம் என்றார்கள். எழுதாமல் இருக்கும் ஓலையினாலான ஏடுகளை வெள்ளேடு என்றும் வெள் ளோலை என்றும் பெயரிட்டு அழைத்தார்கள் என்று அறியக் கூடியதாக இருக்கிறது.

பனை ஓலையினால் ஆகிய ஏடுகளைக் குறிக்க இன்னும் பல சொற் களை எங்கள் முன்னோர்கள் தங் கள்வசம் வைத்திருந்தார்கள். அவை



பற்றி தனி நூலே எழுதி விடலாம். அசை, இணாட்டு, இருவிள, ஊக ஆதாரப்படி, ஊக மூலப்படி, ஏடுதி ருப்புதல், ஓலைதீட்டுதல், ஓலையாள், கணக்காயர், கதம்பை, கரம், கை முறி, கோணோலை, சுகஸ்தலிகி தம், திருக்கைக்கோட்டி, இப்படி எண்ணில்லாச் சொற்களைப் பெயராக்கி கற்பகதருவாம் பனையின் ஓலையினை அதனால் ஆகிய ஏட்டினை கண்டு மகிழ்ந்து பயனடைந்தி ருக்கிறார்கள் எங்களின் முன்னோர்கள். அதுமட்டுமல்ல இப்படியும் பனை ஓலையினால் ஆகிய ஏட்டினை அழைத்து மகிழலாம் என்பதற்கும் பல அருஞ் சொற்களை ஆக்கி அளித்தி ருக்கிறார்கள் என்னும் பொழுது எங்கள் முன்னோர்களின் ஆற்ற லை ஆளு மையை வியக்காமல் இருந்திட முடியுமா!

எண்ணக் கருத்துகளைச் சுமந்து எங்களுக்கு அளித்த பெருமை ஏட்டுச் சுவடிகளுக்கே உரியது என் பதில் எள்ளளவும் ஐயம் இல்லை என லாம். இன்று நாங்கள் நூல்களாய் கைகளில் வைத்து பயன் அடை யும் மூலத்தை அளித்தன ஏடுகள் அல்லவா ! அரிய பெரிய பொக்கிஷங் களையெல்லாம் அழியாமல் காத்த எங்கள் முன்னோரின் தொழில் நுட்ப ஆற்றலையும் வியக்காமல் இருக்கவே முடியாதும் இருக்கிறது அல்லவா ! அத்தனை கருவூலங்களையும் அடக்கு-வதற்கு கைகொடுத்தது கற்பகதருவாம் பனையின் ஓலைகள் என்னும் பொழுது - பனை எங்களின் உறவாகி எங்களுடன் இரண்டற இணைந்து விடுகிறது அல்லவா !

பனையின் ஓலையினாலான ஏடுகள் என்றவுடன் எங்களுக்கு முன்னால் வந்து நிற்பவை சாதாரண ஏடுகளே. அதாவது நீளமாக ஒரு குறி ப்பிட்ட அளவில் வெட்டப்பட்ட நறுக்குகளாகவே அவைகள் இருக்கும். அவற்றையே நாம் கண்டிருப்போம். ஆனால் ஏட்டுச் சுவடிகள் பல வடிவ ங்களில் இருப்பதை நம்மில் எத்தனைபேர் அறிவோம். சிறிய, பெரிய சுவடிகள், பம்பரச் சுவடிகள். அது மாத்திரமல்ல சிவலிங் கத்தின் வடிவத்தி லும் ஏட்டுச் சுவடிகள் அமைந்தி ருக்கின்றன. திருமுருகாற்றுப்படை என் பது முருகப் பெருமான் பெருமை கூறும் நூலாகும்..முருகனை அடை வதற்கு வழிகாட்டும் அதாவது ஆற்றுப்படுத்தும் நூல் என்பது அதன் அர் த்தமாகும். இந்த நூல் வட்டவடிவான மிகச்சிறிய ஓலையில் எழுதப்பட்டிருக்கிறது. இதனை பம்பரச் சுவடி என்றார்கள். எட்டு சென்டி மீற்றர் நீளமும், முக்கால் சென்டி மீற்றர் அகலமும் கொண்ட சுவடிகள் சிறிய சுவடிகள் என்று அழைக்கப்பட்டன. ஐம்பது சென்டி மீற்றர் நீளமும், நான்கு சென்டி மீற்றர் அகலமும் உடைய சுவடிகளை பெரிய சுவடிகள் என்று அழைத்தார்கள் அச்சடித்த நூல்களுக்கு அப்பாவும் , அம்மாவுமே எங்களின் பனை ஓலை தந்த ஏடுகளேயாகும். அச்சடித்த நூல்களை வரி சையாய் அடுக்கி வைத்து அனைவருமே பயன் அடையும் வண்ணம் செய்வதற்கு பெரிய அளவில் நூலக ங்கள் அமை க்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் பழந்தமிழ் ஏட்டுச் சுவ டிகளையும் நூலகத்தில் பாதுகாத்து பயனடையச் செய்திருப்பதையும் அறிந்திருப்பது அவசியம் அல்லவா! சுவடிகளைத் தேடி எடுத்து ஏறக் குறைய எழுபது ஆயிரம் சுவடிகளை - அச்சடித்த நூல்களை அலுமாரி களில் அடுக்கி வைத்திருப்பது

(8ஆம் பக்கம் பார்க்க...)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Roty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் எந்தச் சமூகமாக இருந்தாலும் காணி கொள்ளையில் ஈடுபடுவது குற்றமே

## சாணக்கியன் எம்.பி. காட்டம்



எந்தச் சமூகமாக இருப்பினும் சட்ட விரோதமாக காணிக் கொள்ளைகளில் ஈடுபடுவது குற்றம் குற்றமே. வெளியில் பிரதேசவாதம், சமூகவாதம், இனவாதம் கதைத்து மக்களை பிரித்து தங்கள் சுய தேவைகளைமறைமுகமாகபெறுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நாவலடிப்பகுதியில் (கொழும்புவீதியில்) அத்துமீறி சட்டவிரோதமாக பிடிக்கப்படும் காணிகள் தொடர்பான விடயங்களை ஆராயவும் தடுக்கவும் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாவலடி பிரதேசத்தில் பாரியளவில் சட்ட விரோத காணிக் கொள்ளை இடம்பெறுவது கையும் களவுமாக பிடிபட்டதுடன்வெளிச்சத்துக்குவந்ததுள்ளது. இந்தக் கொள்ளைகள் தொடர்பான தடுப்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும். எந்தச் சமூகத்தினர் ஆயினும் சட்டவிரோதமாக காணி அபகரிப்பில் ஈடுபடுகின்றமை குற்றம் குற்றமே. இவற்றுக்கு பின்னால் அரச சார் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும்தரகுப்பணத்துக்காகவும்தங்களது கட்சியின் தங்களை சார்ந்தவர்களின் சுய நலனுக்காகவும் இவ் காணிகள் ஆனது சட்டவிரோதமான முறையில் அபகரிக்கப்பட்டு வருக்கின்றது.

வெளியில்பிரதேசவாதம், சமூகவாதம், இனவாதம்கதைத்துமக்களைதங்களதுசுய இலாபங்களுக்காகபிரித்துவைத்துதங்களின் சுயதேவைகளை இவர்கள் மறைமுகமாக ஒற்றுமையாக செயற்பட்டு இவ்வாறான சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவ்வாறான செயல்பாடுகளைத்தடுக்கவேண்டியவர்களே இவ்வாறானசட்டவிரோதசெயற்பாடுகளில் ஈடுபடுவது அதற்குரிய ஆதரவினைவழங்குவது அனைத்து இன மக்களின் எதிர்கால சந்ததியினரின் இருப்புக்களை கேள்விக்குறியாக்குதற்கு சமமானதாகும்.

புளுட்டுமானோடை சட்ட விரோத காணி அப கரிப்பு ஒரு பக்கம் பாரியளவில் நடந்து வரும் அதே வேளை அதற்கு ஈடாக இங்கும் போட்டி போட்டுக்கொண்டு நடந்து வருகின்றது. இவ்வாறானசட்டவிரோதநடவடிக்கைகள் உடனடிக்க நிறுத்தப்படவேண்டும். எந்த சமூகம் சட்டவிரோதமாக செயல் படினும் குற்றம் குற்றமே. இவற்றுக்கான நடவடிக்கைகள்உடனடியாகஎடுக்கப்படும். - எனத் தெரிவித்தார். (05)

# எவருக்கும் அஞ்சவேண்டிய அவசியம் எமக்கு இல்லை

## அமைச்சர் கஞ்சன விஜேயசேகர கூறுகிறார்



தற்போது இருக்கும் வறட்சி நிலைமையால் மின்சாரத்தைக்கொள்வனவு செய்யவேண்டியநிலைமை ஏற்பட்டால்நாம் எவருக்கும் அஞ்சாமல் அதனை மேற்கொள்வோம் என எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றஅமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமனலவாவியிலிருந்து மின்சாரத்துக்கு நீரை வழங்குவதானது அவசர கொள்வனவிற்காக அல்ல.

அதை தடுக்கவே நாம் இவ்வளவு காலம் நீரை முகாமைத்துவம் செய்து நீரை வழங்கி வருகிறோம்.

ஜூலை 30 ஆம் திகதி நீர்ப்பாசன அமைச்சு நீர்முகாமைத்துவ திணைக்களத்திடம் கேட்டுக் கொண்டமைக்கு இணங்க, நாம் அதிகளவுநீரை வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

ஒக்ரோபர் 15 ஆம் திகதி வரை எந்தப்பிரச்சினையும் இல்லாமல் மின்சாரத்தை வழங்க முடியும். மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டிய தேவையும் கிடையாது.

மார்ச் மாதம் மின்சாரத்தை கொள்வனவு செய்யுமாறு மின்சார சபை தெரிவித்தது. ஆனால், நாம் மாற்றுவழிகளைகையாளுமாறுவலியுறுத்தியிருந்தோம்.

அதற்கு இணங்க 10 மெகா வோட் டீசல் ஜெனரேட்டரை மத்துகமவிலும், 30 மெகா வோட் ஜெனரேட்டரை அம்பாந்தோட்டையிலும் பொருத்தி, தற்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு மாதத்துக்கு முன்னர் மின்சார சபைக்கு நீர்ப்பற்றாக்குறைபிரச்சினை இருப்பதாக நீர்ப்பாசன அமைச்சு தெரிவித்திருந்தது.

தற்போது இருக்கும் வறட்சிநிலைமைகாரணத்தினால் மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டால் நாம் எவருக்கும் அஞ்சாமல் அதனை மேற்கொள்வோம். யார் என்ன சொன்னாலும்மக்களுக்குத் தேவையானமின்சாரத்தை வழங்க நாம் நடவடிக்கை எடுப்போம். கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்க அரசாங்கம் எந்த தயக்கத்தையும் காட்டாது. - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# அரசியல் காய்நகர்த்தலுக்கே ரணில் கையிலெடுத்தார் 13ஐ

## ரஞ்சித் மத்தும பண்டார சாடல்

நாடாளுமன்றில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உரியது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அவர், 13 தொடர்பான தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி முதலில்அறிவிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக ஆராய கடந்த மாதம் ஜனாதிபதி தலைமையில் சர்வக்கட்சி மாநாடு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டிருந்த கட்சிகள் அனைத்தும், மாகாணசபைத் தேர்தலை முதலில் நடத்து மாறுதான் வலியுறுத்தியிருந்தன.

ஆனால், ஜனாதிபதியோ 13 வேண்டுமா - மாகாணசபைத் தேர்தல் வேண்டுமா என கேட்டார்.

13 ஐ அமுல்படுத்த மாகாணசபை தேவைப்படுகிறது.

இதற்கான தேர்தலை நடத்துமாறு தமிழ், முஸ்லிம் கட்சிகள் மட்டுமன்றி தெற்கின் சிங்களக் கட்சிகளும் வலியுறுத்தியவுடன், ஜனாதிபதி மாநாட்டிலிருந்து எழுந்து சென்று விட்டார்.

13 ஆவது திருத்தச்சட்டம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒன்றாகும். இதனைநடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கே உள்ளது.

இந்தநிலையில், இதில் உள்ள அதிகாரங்களில் எவற்றையெல்லாம் வழங்க முடியும் என முதலில் அவர் கூறவேண்டும்.

13ஐகொண்டுவந்தபோது, எதிர்க்கட்சிகளிடம் அனுமதி கேட்டார்களா? இல்லை. சட்டமூலமொன்றைகொண்டுவர வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கானது. அது கொண்டுவரப்பட்ட பின்னர், எதிர்க்கட்சிகள் யோசனைகளைத்தான் முன்வைக்க வேண்டும். 13 இற்குநாம்ஆதரவானவர்கள்.

13 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக வடக்கு - கிழக்கு மக்களுக்கு அதிகாரத்தை வழங்குவதல்ல இவர்களின் நோக்கம்.

மாறாக, அடுத்ததேர்தலில் அந்த மாகாணங்களில் இருந்துஎவ்வாறுவாக்குகளை பெற்றுக் கொள்வது என்ற அரசாங்கத்தின் அரசியல் காய்நகர்த்தலுக்கே இது. - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

### டுபாயில் மறைந்திருக்கும்

# பாதாளக் கும்பலைப் பிடிக்க இலங்கை அரசு நடவடிக்கை

டுபாயில் இருந்து கொண்டு இலங்கையில் போதைப்பொருள் வியாபாரம் செய்யும், கப்பம் அறவிடும், கொலைகள் புரியும் இலங்கையின் பாதாளக் குழு உறுப்பினர்களைக் கைதுசெய்வதற்குஇலங்கை அரசாங்கம்விசேடவேலைத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

அந்நாட்டுப்பொலிஸாரின் உதவியுடன் அவர்களைக் கைது செய்து நாட்டுக்குக் கொண்டு வருவதற்குப் பொலிஸ் திணைக்களமும் சட்டம், ஒழுங்கு அமைச்சும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

34 பாதாளக் குழு உறுப்பினர்கள் டுபாயில் இருந்துகொண்டு இலங்கையில் பல குற்றச் செயல்களைப் புரிந்து வருகின்றனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, இலங்கை வர்த்தகர்களுக்குக் கொலை மிரட்டல் விடுத்து அவர்களிடமிருந்து கப்பம் பெறும் இரு குற்றவாளிகள் வலையமைப்பு செயற்படுவதாகஅண்மையில் தகவல்வெளியாகியிருந்தது.

இலங்கை வர்த்தகர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்து அவர்களிடமிருந்து கப்பம் பெறும் வலையமைப்பை இயக்கியமுக்கியநபர்கள்கைது செய்யப்பட்டதையடுத்தே மேலும் இரு குற்றவாளிகள் வலையமைப்பு குறித்து தகவல்கள் வெளியாகியிருந்தன.

இவ்வாறு மிரட்டல் விடுத்து கோடிக்கணக்கில் கப்பம் கோரும் டுபாயில் பதுங்கியிருக்கும் திட்டமிட்ட குற்றவாளிகள் இருவர் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தகவல் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 6 பேர் கைது



வவுனியாவில்பல்வேறு இடங்களில் இடம்பெற்ற நகைத் திருட்டுக்களுடன் தொடர்புடைய 6 பேரை நெளுக்குளம் பொலிஸார் திங்கட்கிழமை கைது செய்துள்ளனர். அத்துடன் அவர்களிடம் இருந்து கார் மற்றும் இரண்டு மோட்டர் சைக்கிள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுனியாவில் கடந்த 6 மாத காலமாக வழிப்பறிச் சம்பவம் அதிகளவில் இடம்பெற்று வருவதாகவும், குறிப்பாகவீதிகளில்செல்வோரிடம்இருந்து தங்கச்சங்கில்அறுக்கப்படும் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் அதிகளவில் முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன எனவும், வவுனியாவின் நெளுக்குளம், பம்பைமடு, வேப்பங்குளம் ஆகிய பகுதிகளிலேயே இத்திருட்டுச்சம்பவம் அதிகளில் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையில் இச்சம்பவங்களை ஒரு குழுவினரேதிட்டமிட்டுமேற்கொண்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அக்குழுவைச் சேர்ந்த 6 பேரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளர். இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், தம்பனை, பெரியதம்பனை ,குட்செட் வீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட காரில் வைத்தியசாலை சேவையில் பணியாற்றுபவர்கள் பயன்படுத்தும் ஸ்டிக்கர்ஒட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# வீட்டில் கஞ்சா செடி வளர்த்தவர் கைது!

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தரவளை தோட்டத்தில் கஞ்சா செடி வளர்த்த சந்தேகநபர் ஒருவரைக்ஹற்றன்பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹற்றன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, குறித்த சந்தேகநபரின் வீட்டுப் பகுதியைச் சுற்றிவளைத்த பொலிஸார், அங்கு தேடுதலில் ஈடுப்பட்டபோது, பூந்தோட்டத்தில் வளர்க்கப்பட்ட இரண்டரை அடி உயரமான கஞ்சா செடி கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் ஹற்றன் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தஹட்டன் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கொழும்பில் கார் மோதி தமிழ் யுவதி உயிரிழப்பு

கார் மோதி இளம் யுவதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு - இரத்மலானையில் திங்கட்கிழமை காலை 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையைச்சேர்ந்தவரும் தெஹிவளையில் வசிப்பவருமான 24 வயதுடைய சிவலிங்கம் சிவப்பிரியா என்ற பெண்ணே இந்த விபத்தில் சாவடைந்துள்ளார்.

தனியார் நிறுவனமொன்றில் பணியாற்றும் குறித்த யுவதி, பஸ்ஸால் இறங்கி வேலைத்தளத்துக்குச் செல்வதற்காக வீதியைக் கடக்க முயன்றபோது வேகமாக வந்த கார் மோதி அவர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

குறித்த யுவதி, வீதிக் கடவை இல்லாத பகுதியால் வீதியைக் கடக்க முயன்றுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. காரின் சாரதியைக் கைது செய்த பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிகவிசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸ் கான்ஸ்டபிளைக் கல்லால் தாக்கிய பொலிஸ் சாரதிக்குப் பிணை

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் இரண்டு பொலிஸாருக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் கல்லால் தாக்கிய சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பொலிஸ் சாரதியை வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் வாகனச் சாரதிக்கும் இன்னொரு பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் இடையே ஞாயிறு இரவு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது. இதன்போது பொலிஸ் சாரதி கல்லால் சக பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டார்.

தாக்கிய பொலிஸ் சாரதியைக் கைது செய்த பொலிஸார், தாக்குதலில் காயடைந்த பொலிஸாரை வைத்தியசாலையில் சேர்த்தனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் சாரதி வாழைச்சேனை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை நீதிவான் பிணையில் விடுவித்தார்.

குறித்த பொலிஸ் சாரதி உடனடியாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஒழுக்காற்றுக் குழுவும் விசாரணைகளை முன்னெடுக்கின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# நிந்தவூர் பாடசாலையில் பாலியல் துஷ்பிரயோகம்

## ஆசிரியருக்கு விளக்க மறியல், அதிபருக்கு பிணை

அரச பாடசாலை ஒன்றில் மாணவன் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில்பொலிஸில்சரணடைந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார் .

மேற்படி வழக்கு திங்கட்கிழமை சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் ரி. கருணாகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் பிரதான சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியருக்கு 14 நாள்கள் விளக்கமறியலும் இரண்டாவது பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள பாடசாலை அதிபரை தலா ஒரு லட்சம்ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார். அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் உடற்கல்வி ஆசிரியராக செயற்பட்டு வந்துள்ள சந்தேகநபர் கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி விளையாட்டு அறையில் வைத்து பாலியல் ரீதியாக மாணவனை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்த முயற்சித்தார் எனத் தெரிவித்து ஒகஸ்ட் 2 ஆம் திகதி அம்மாணவன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் தலைமறைவாகி இருந்த சந்தேக நபரான ஆசிரியர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தனது சட்டத்தரணி ஊடாக பொலிஸில் சரணடைந்த நிலையில் சந்தேக நபரை நிந்தவூர் பொலிஸார் திங்கட்கிழமை சம்மாந்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். இந்தச் சம்பவம் இடம்பெற்று மறுநாள் பாதிக்கப்பட்ட மாணவன் அதிபரிடம் முறையிட்டுள்ளதுடன் இரு வாரங்கள் கழிந்தும் எந்தவிதமான நடவடிக்கையும்எடுக்கப்படாமல்மூடி மறைப்பதற்கானமுழுமுயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என ஊடகங்களுக்கு பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கற்பகதரு எனும் அற்புதம்.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

போல இந்த நூலகத்தில் அடுக்கிப் பாதுகாப்புடன் பயன்படுத்தும் வகையில் வைத்திருக்கிறார்கள். சென்னையில் அமைந்திருக்கும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் அமைந்திருக் கும் கீழ்த்திசை சுவடிகள் நூலகம்தான் இந்த அரிய பணியினைச் செய்திருக்கிறது. ஓலைச் சுவடிகளை ஆராய்கின்ற ஆய்வறிஞர்களுக்கு அந்த நூலகம் பெருங்கொடையாய் , வரப்பிரசாதமாய் அமைந்திருக் கிறது எனலாம்.நூலகம் என்னும் நிறுவனம் பதினாறாயிரத்து ஐந்நூறு ஏட்டுச் சுவடிகளைத் தேடி எடுத் துப் பாதுகாத்து வைத்துப் பேணி வருகிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

ஓலைச் சுவடிகளின் அருமை தெரியாதவர்கள் அவற்றை அடுப்பு எரிக்கவும் பயன்படுத்தியிருக்கிறார் கள். சிலர் ஓலைச் சுவடிகளை ஓடுகி ன்ற நீர் நிலைகளிலும் விட்டிருக்கிறார்கள். சிலர் தம்வசம் இருந்த ஏட் டுச்சுவடிகளைப் பிரித்துப் பார்க்காமலுங்கூட இருந்திருக்கிறார்கள்.

சம்பந்தப் பெருமான் காலத்தில் அனல் வாதம் , புனல் வாதம் என்னும் போட்டியில் முக்கியம் பெற்றது ஓலைச்சுவடிகளே. மணிவாசகர் திரு வாசகத்தை ஓலையில் எழுதி இறைவன் சன்னிதியில் வைக்க அடுத்த நாள் அந்த ஓலை திருத்தமாய் வந்ததாயும் புராணம் செப்புகிறது.

பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக என்று இறைவன் பணித்ததாயும் அதற்கு ஒப்ப மணிவாசகரும் திருக் கோவையாரைப் பாடினார் என்றும் அறிகின்றோம். பாவையும் கோவையும் ஓலையில்த்தான் எழுதப்பட்டன என்பதும் மனமிருத்த வேண்டியதே. ஏடுகளைத் தேடி ஊர் ஊராய் அலைந்து திரிந் தவர்தான் எங்கள் தமிழ்த் தாத்தா உ.வே.சா அவர்கள். அவர் பசியும் பாராது , உடற் களைப்பும் பாராது பழந்தமிழ் ஓலைச் சுவடிகளைத் தேடுவதையே குறிக்கோளாய்க் கொண்டு வாழ்ந்தார் என்பதை யாவரும் அறிவார்கள். அவர் ஓலைச் சுவடிகளைத் தேடிப் போகும் வேளை தாம் கண்டு அனுபவித்த வியங்களை மனம் நொந்து எழுதியதையும் நாம் பார்க்கின்றோம், வீட்டில் பழைய ஓலைச் சுவடிகள் இருந்தால் பெருந்தோம் என்று எண்ணி அவற்றை நெருப்பில் இட்டும் நீரில் இட்டும் பலர் செய்ததைக் கண்ணாரக் கண்டு கண்ணீர் விட்டு வேதனை அடைந்ததாகவும் தமிழ்த் தாத்தாவின் சரித்திரம் எங்களுக்கு சொல்லுகிறது.என்றாலும் அவர்களிடம் கெஞ்சி மன்றாடி பல ஓலைச் சுவடிகளை எடுத்துவந்தார் என்பதையும் அறியமுடிகிறது.சரியான முறையில் பேணிப் பாதுகாக்கப்படாத படியால் எங்களின் பக்திப் பனுவல்களான திருமுறைகள் பல - பூட்டிய அறைக்குள் கறையான்களுக்கு உணவாகிப் போனதையும் மனத்திருத்தல் வேண்டும், சரியான. முறையில் அந்த ஓலைச் சுவடி கள் காக்கப்பட்டிருந்தால் இன்னும் எத்தனையே அரிய திருமுறைப் பாடல்களை நாம் கண்டு பயன் பெற்றிருந்திருப்போம்.ஓலை தந்து அதனை ஏடாக்கி எழுதிட வைத்திட்ட பனைகூட இப்படியான செயல் களைக் கண்டு கண்ணீர் வடித்திருக்கும் என்றுதான் எண்ண வேண்டும் அல்லவா ! தானமாய் தன்னுடைய ஓலை களைக் கொடுத்து - உங்கள் சிந்தனைகளை மனத் திலே வைக்காமல் வருங்கால சந்ததியினருக்கும் வழங்குங்கள். அப்படி வழங்குவதற்கு நான் என்றும் துணையாக இருப்பேன் என்று கை கொடுத்தது பனை அல்லவா! அந்தப் பனை - பொறுப்பில்லா மனிதர்களின் செயலினைப் பார்த்து எப்படி யெல்லாம் கலங்கி இருக்கும்! கலங்கினாலும், கவலைப்பட்டாலும் தன்னால் எவ்வளவு கொடுக்க முடியுமோ, எவ்வளவு உதவிட முடியுமோ அவ்வளவையும் கொடுத்துக் கொண்டேதான் இருக்கிறது. நாங்களோ மரம் என்று பனையினைப் பார்த்து சொல்லி விட்டு உணர்வில்லா மனிதர்களாகவே உலவுகிறோம்.

**எழுத்தோலைச் சுவடிசெய்யக்**
**குருத்தோலை தந்திடுவேன்**
**ஏடாக நானெழுந்து**
**எல்லோர்க்கும் உதவிடுவேன்**
**மனமிருக்கும் கருத்துக்கள்**
**மற்றவர்க்குக் கொடுப்பதற்கு**
**பக்குவமாய் ஓலைதந்து**
**பாரெல்லாம் வளர்ந்திடுவேன்**
**எத்திசையில் இருப்பார்க்கும்**
**இயன்றவரை உதவிடுவேன்**
**எனைப்பார்த்து நீங்களுமே**
**இயன்றவரை உதவிட்டால்**
**நலமுடனே எல்லாரும்**
**நன்றாக வாழ்ந்திடலாம்**





காலைக்கதிர் Kalaikkathir

# யானை தாக்கி ஒருவர் இறப்பு

காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம், மதவாச்சி பிரதேசத்தில் ஞாயிறு இரவு இடம்பெற்றுள்ளது.

ஒரு பிள்ளையின் தந்தையான 26 வயதுடைய பி.சாரங்க என்ற நபரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வயல் நிலத்தைப் பாதுகாக்க வயலில் தங்கச் சென்ற வேளை யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

சம்பவம்தொடர்பில்மதவாச்சிப்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிணற்றில் தவறி விழுந்து 6 வயது சிறுவன் உயிரிழப்பு

கிணற்றில் தவறி விழுந்து 6 வயது சிறுவன் உயிரிழுந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்தசிறுவன்தாயாருடன்குளித்துக்கொண்டிருந்தபோதே கிணற்றில் தவறி விழுந்து சாவடைந்துள்ளார்.

அருணாசலம் சிவரூபன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# விமான விபத்துக்கள் தொடர்பாக அரசே பொறுப்புக் கூறவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கோரிக்கை



அருங்காட்சியகத்தில் வைக்கப்பட வேண்டிய விமானங்களைப் பயிற்சி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியதே உயிரிழப்புக்களுக்குகாரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறிஜயசேகரதெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

விமான விபத்தில் இரு வர் உயிரிழந்துள்ளார்கள். விபத்துக்குள்ளான விமானம் 1958 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ஒன்றாகும்.

விமானத்தின் இயந்திரம், 1961 ஆம்ஆண்டுநிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனை நிர்மாணிக்கும்போது நாம் பிறந்துகூட இருக்கவில்லை.

பி.டி. 6 எனும் சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 6 விமானங்கள், விமானிகளின் பயிற்சிக்காக இன்னமும் பயன்படுத்தப்படுகின்றன.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான வின் கமான்டர் தரிந்து ஹேரத் எனும் விமான பயிற்சி ஆலோசகரும், அலவ்வ பகுதியைச் சேர்ந்த பயிற்சி விமானியான பெசான் வர்ணசூரிய எனும் இளைஞனும் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்கள்.

இவர்களின் மரணத்துக்கு யார் காரணம்? அருங்காட்சியகத்தில் வைக்கப்பட வேண்டிய விமானத்தில்தான் இவர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

இதுபோன்று 6 பேர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார்கள். நாட்டில் விமானிகள்இவ்வாறுஉயிரிழப்பதுமிகவும் துரதிஷ்டவசமான ஒன்றாகும்.

இதற்கு யார் பொறுப்பு என்பதை அரசாங்கம்கூறவேண்டும். கிபீர் விமானங்களை புதுப்பிக்க 55 மில்லியன் டொலரை அரசாங்கம் செலவுசெய்தது.

ஆனால், 0.75 மில்லியன் டொலர்தான் இந்த விமானத்தின் பெறுமதி. இவ்வாறு இருக்கையில், பழைய விமானங்களைபயன்படுத்தி இன்னமும் உயிர்களை பலி கொடுக்கவா அரசாங்கம் முற்படுகிறது? - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# மனைவியைச் சுட்டுக் கொன்ற கணவன் தானும் உயிர்மாய்ப்பு

## நுவரெலியாவில் பரபரப்பு

குடும்பத் தகராறு காரணமாக கணவன், மனைவியைச் சுட்டுக் கொன்றதுடன் அவரும் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்தச் சம்பவம் நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டோப் பாஸ் பகுதியிலுள்ள வீடொன்றில் திங்கள் இரவு இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் விசாரணையில் இலங்கையில் தயாரிக்கப்பட்டதுப்பாக்கியால் கணவர் சுட்டது தெரியவந்துள்ளது.

நுவரெலியா, டோப் பாஸை வசிப்பிடமாகக் கொண்ட 28 மற்றும் 26 வயதுடைய தம்பதியினரே இந்தச் சம்பவத்தல் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியாபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

# இனங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்த நாடாளுமன்றிலும் முயற்சி

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ வருத்தம்

இனங்களுக்குஇடையில்முறுகலை ஏற்படுத்த நாடாளுமன்றுக்குள்ளும் பலர் முயற்சித்து வருகின்றனர் என சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச் சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதேஅவர்இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நல்லிணக்கம் இல்லாத காரணத்தால்தான் நாடு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது.

இதனால், ஜனாதிபதி சர்வக்கட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுத்து, பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி எடுத்து வருகிறார்.

ஆனால், இதற்கு சிலர் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவதில்லை. நாட்டில் 75 வருடங்களாக நீடிக்கும் பிரச்சினைகளுக்குதீர்வைக் காணாமல், அதிகாரத்தைக் கைப்பற்றவே இவர்கள் முயல்கிறார்கள்.

நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்தபோதுகூட, நாடாளுமன்றில் ஒன்றாக செயற்பட முடியாத நிலைமை தான் காணப்படுகிறது.

இரண்டு இனங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்த நாடாளுமன்றுக்குள்ளும் பலர் இன்று முயற்சித்து வருகிறார்கள்.

13 இன் ஊடாக அதிகாரங்களை வழங்கினால், பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கூறுகிறார்கள்.

ஆனால், காணி அதிகாரம் ஜனாதிபதியிடம் மட்டும்தான் உள்ளது.

இதில்ஒருபகுதிகாணிஅமைச்சுக்கும் இன்னொரு பகுதி காணி ஆணையாளர் நாயகத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு அப்பால் நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும், பிரதேச செயலகத்துக்கு தான் உள்ளது.

எனவே, நாம்அனைவரும்ஒன்றாக இணைந்து நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படவேண்டும். 75 வருடங்களாக தோல்வியடைந்துவிட்டோம். அடுத்த 25 வருடங்களிலேனும்ஒன்றாகபயணித்து வெற்றி காண்போம். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# கடலில் குப்பைகள் கொட்டியவர் கைது

பேருவளை, மருதானை மீன்பிடி துறைமுகத்தை அடுத்துள்ள கலங்கரை விளக்கத்துக்கு சற்று தொலைவில் கடலில் கழிவுகளை கொட்டிய அந்த பகுதியை சேர்ந்த நபர் ஒருவரை பேருவளை மீன்பிடி பரிசோதக அதிகாரிகள் குழுவினர் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த நபர் அப்பகுதியில் பழைய பொருள்களை சேகரிப்பவர் என்றும், பணத்துக்குப் பயன்படும் பொருள்களை மட்டுமேசேகரித்துவிற்பனைசெய்பவர்எனவும், மீதமுள்ள குப்பைகளை இரவு மற்றும் பகலில் அதிக அளவில் கடலில் கொட்டுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால், கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும் குறித்த நபர் அவ்வப்போது குப்பைகளை அகற்றும் சம்பவங்களை அவதானித்த பேருவளை அதிகாரிகள் குழு பொலிஸாரின் ஆதரவுடன் சந்தேக நபரை திங்கட்கிழமை கைது செய்துள்ளனர்.

அதனையடுத்து, அவரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்து, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்றொழில் பரிசோதகரின் பிரதான அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றதாக பேருவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# பாடசாலை மாணவன் வெட்டிப் படுகொலை!

உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் பாடசாலை மாணவன் ஒருவர் கத்தியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் குருநாகல், பண்டவஸ்நுவரை மேற்கு பிரதேசத்தில் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த மாணவனின் வீட்டுக்கு முன்னால் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த மாணவன், வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார். பண்டவஸ்நுவரை பாடசாலையொன்றில் உயர்தரத்தில் கல்வி கற்கும் ஆர்.டி.அனுரப்பிரியதர்ன (வயது 18) என்ற மாணவனே சாவடைந்துள்ளார்.

இந்தச்சம்பவம்தொடர்பில் 7 பேரைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். மாவட்ட உற்பத்தியாளர்களை ஏமாற்றும் வெளிமாவட்ட வியாபாரிகள்

வெளிமாவட்ட வியாபாரிகள் , உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் காசோலை மோசடியில் ஈடுபட்டு வரும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் , இது தொடர்பில் உள்ளூர் உற்பத்தியாளர்களை விழிப்புடன் இருக்குமாறும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ.; உற்பத்தியாளர்களை நாடி வரும் வெளிமாவட்ட வியாபரிகள் , அவர்களிடம்இருந்துஉற்பத்திபொருள்களைக் கொள்வனவு செய்து விட்டு , பணத்துக்குப் பதிலாக காசோலைகளை வழங்கிவிட்டுச் செல்வதாகவும், குறித்த காசோலையை உற்பத்தியாளர்கள் வங்கியில் வைப்பிலிடும் போது , கணக்கில் பணம் இல்லை என வருவதாகவும், அதன் பின்னரே தாம் ஏமாற்றப்பட்ட விடயம் அறிந்து பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்கின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில் யாழில் கடந்த 07 மாதங்களில் 10 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான காசோலை மோசடி தொடர்பில் 21 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அதில் 06 மோசடி சம்பவங்கள் தொடர்பில் 07 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் இது தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

அதேவேளை 10 லட்சம் ரூபாவுக்குக் குறைவான மோசடிகள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் பலமுறைப்பாடுகள் உள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# தந்தையால் மகன் வெட்டிப்படுகொலை

தந்தைக்கும் அவரது மகனுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் தந்தையால் அவரது மகன் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் குருநாகலில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

நிதிப் பிரச்சினை காரணமாகத் தந்தைக்கும் அவரது மகனுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில், அது மோதலாக மாறியதையடுத்து இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குருநாகல் - மாஎலிய பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் 45 வயதான தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

# மின்சக்தி எரிசக்தி அமைச்சருடன் கிழக்கு ஆளுநர் விசேட சந்திப்பு

கிழக்கில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவிற்கும் இடையில் விசேடக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போதே கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்தப்படவுள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயற்திட்டங்கள் தொடர்பாக எரிசக்தி செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் சாவு!

திருகோணமலை - குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளவக்குளம் பகுதியில் இன்று இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை - தோப்பூரைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் அன்சார் (வயது 31) என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த இளைஞர் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பில் குச்சவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பஸ் மீது கல்வீச்சு யாழில் பெண் கைது

யாழ்ப்பாணம் - அச்சுவேலி இடையே சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் ஒன்றின்மீது கல்லெறிந்து சேதப்படுத்திய குற்றச்சாட்டில் சிறுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரை யாழ்.பொலிஸார் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# டேவிட் சதானந்தன் சொலமன் மறைவு; முன்னாள் பேராயர் டானியல் இரங்கல்!

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் முன்னாள் செயலாளரும் , வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியின் முன்னாள் அதிபருமான வண. கலாநிதி டேவிட் சதானந்தன் சொலமன் (வயது 61) கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

திடீர் சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் அவர் உயிரிழந்தார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் அன்னாரின் பிரிவு தொடர்பில் ஓய்வு பெற்ற தென்னிந்திய திருச்சபை பேராயர் டானியல் எஸ்.தியாகராஜா கனடாவில் இருந்து இரங்கல் செய்தியொன்றை அனுப்பியுள்ளார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# நுரைச்சோலை செயலிழப்பு

நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் அலகு 2 தொழில்நுட்பக் கோளாறால் செயலிழந்துள்ளன என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும்இதன்காரணமாகமின்வெட்டுஇருக்காதுஎன்றும் இரண்டு ஆலைகளில் மூன்று திருத்தப்பட்டுவருவதுடன், மேலும் தொழில்நுட்பக் கோளாறால் மீதமுள்ள இரண்டும் செயலிழந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# வைத்தியருக்கு பிரியாவிடை

கல்முனைபிராந்தியசுகாதாரசேவைகள்பணிமனையில் தர முகாமைத்துவப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றி பல்வேறு செயற்றிட்டங்களுக்கும் கருத்திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கி பிராந்தியத்தின் தரப்படுத்தலில் அதிக பங்கு வகித்த டாக்டர் பி.ஜி.பி. டேனியல் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்று செல்கின்றார்.





கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் அதன்உத்தியோகத்தர்கள்ஊழியர்களும்அவரின்சேவையை பாராட்டி பிரியாவிடை வழங்கும் நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைவாக பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்றது.

பணிப்பாளர் முக்கிய பணி காரணமாக கொழும்பு சென்றிருந்தாலும் இந்நிகழ்வில் நேரலை மூலமாக தனது வாழ்த்துச் செய்தியை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# பவள விழாவை முன்னிட்டு வரையப்பட்ட சுவர் ஓவியங்கள் கல்முனையில் திறப்பு



கல்முனை கல்வி வலய கல்முனை கமு/கமு/ அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவின் பவள விழாவை முன்னிட்டு இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் அனுசரணையில் பாடசாலையின் சுவர்களில்கடந்தஇரண்டுமாதங்களாக வரையப்பட்ட ஓவியங்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் எம்.எஸ். எம்.பைசாலின் வழிகாட்டலில் இந்த ஓவியங்களை வரைவதற்கு பொறுப்பான ஒருங்கிணைப்பாளர்களான எஸ்.இஸட்.எம். ஸ்னூஸ், பி.எம்.றுக்ஸான் மற்றும் ஏ.தாரிக்ஆகியோரின்ஏற்பாட்டில் நேற்று பாடசாலை அதிபரால் திறந்து வைக்கப்பட்டன.



இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் எம்.ஏ.ஸலாம், ஒழுக்காற்றுக் குழுத் தலைவர் ஆசிரியர் எம்.பி. எம்.லாபீர்,விளையாட்டுபிரிவுப்பொறுப்பாளர் ஆசிரியர் யூ.எல்.எம்.றியால் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்எஸ்.எல்.ஏ.ஹமீட், பழைய மாணவர்சங்கசெயலாளர்எம்.ஐ.எம். ஜிப்ரி, அக்ஸான் இன்ஜினியரிங் வேக்ஸின் பணிப்பாளர் கே.எல்.எம். அர்ஸாத், பழையமாணவர்கள்சார்பாக எஸ்.என் ஹஸ்மி, எஸ்.எல்.தன்சில், யூ.கே.லாபிர், எஸ்.எம்.ஹர்னி உட்பட நலன்விரும்பிகள், பாடசாலை மாணவர்களும்கலந்துகொண்டனர். (05)

# 56 மதகுருமார்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

## நீதி இராஜாங்க அமைச்சர் தகவல்

சிறுவர் மற்றும் பாலியல் வன்கொடுமை, நிதி மோசடி, புதையல் தோண்டல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புப்பட்டுள்ள 56 மதகுருமார்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) வாய்மூலவிடைக்கானவினாக்களின்போது நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு - 2023 ஜூன் 01 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் பல்வேறு 56 மதகுருமார்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 29 பௌத்த தேரர்கள், 03 இந்து குருமார்கள், 02 மௌலவிகள் கைதிகள் என்ற அடிப்படையிலும், 19 பௌத்த தேரர்களும், 01 கத்தோலிக்க மதகுருக்கள் சந்தேகத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் 19 பௌத்த தேரர்களும், ஒரு இந்து குருக்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பெண் பாலியல் குற்றச்சாட்டில் 03 பௌத்த தேரர்களும் சிறையில் உள்ளார்கள். கத்தோலிக்க, இந்து மற்றும் இஸ்லாம் மத குருமார்கள் பெண் பாலியல் குற்றச்சாட்டில் சிறையில் இல்லை.

அத்துடன், மனித படுகொலை குற்றச்சாட்டில் 2 பௌத்த தேரர்களும் 01 இந்து குருக்களும் உள்ளனர். 01 கத்தோலிக்க மத குரு சந்தேகத்தின் அடிப்படையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். நிதி மோசடி குற்றச்சாட்டில் 2 தேரர்களும், ஓர் இந்து மதகுருக்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 03 பௌத்த தேரர்கள் சிறையில் உள்ளனர். கொடூர பாலியல் குற்றச்சாட்டுடன் 02 பௌத்த தேரர்கள் சிறையில் உள்ளார்கள்.

இந்து, முஸ்லிம், கத்தோலிக்க மதகுருமார்கள் இந்த குற்றச்சாட்டுக்குள் உள்ளடங்கப்படவில்லை. சிறு வயது பிள்ளைகள், ஆண் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் 20 பௌத்த தேரர்களும், 01 இந்து மதகுருக்களும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய சிறைச்சாலைகளில் 48 பௌத்த தேரர்களும் , 03 இந்து குருக்களும், 01 மௌலவிகளும், 04 கத்தோலிக்க மதகுருமார்களும் சிறைக்கைதிகளாக உள்ளனர்.(05)

# மாண்பு மிகு மலையகம் 200 நடைபயணம் கெக்கிராவையை நேற்று சென்றடைந்தது







மாண்புமிகு மலையக மக்கள் கூட்டிணைவு ஏற்பாடு செய்துள்ள தலைமன்னார் முதல் மாத்தளை வரையிலான நடை பயணத்தின் நேற்றைய பயணம் கெக்கிரவையை சென்றடைந்துள்ளது.

நேற்று திறப்பனை முதல் கெக்கிராவ வரை நடைப் பயணம் இடம்பெற்றது.

சகோதர சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் அமோக வரவேற்புடன் இந்தப் பயணம் அமைந்தது.

கத்தோலிக்க குருமார்களும் ஆயரும் இணைந்து நடைபயணத்தை வரவேற்றனர்.

கெக்கிராவ பிரதேசசெயலகத்தில் வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றது.

பள்ளி வாசலில் மலையகம் 200 தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந் தது.

கெக்கிராவ கலாசார நிலைய விரிவுரை மண்டபத்தில் சிரேஷ்ட பாடகர் ஜயதிலக்க பண் டாரவால் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. (05)

# எரிகின்ற நெருப்புக்குள் எண்ணெய் ஊற்றும் தொல்லியல் திணைக்களம்

## அமைச்சர் டக்ளஸ் காட்டம்



“தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வுகளும் அடையாளப்படுத்தல்களும் இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் கலாசார தொன்மைகளையும் வரலாறுகளையும் பேணிப் பாதுகாப்பதாக அமைய வேண்டுமே தவிர, எரிகின்ற நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றுவதாக அமையக் கூடாது” என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்திலேயே கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது சுழிபுரம், பறாளை முருகன் ஆலயம் உட்பட யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் 3 தொல்லியல்திணைக்களத்திற்கு உரிய பகுதியாக அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த பகுதிகளை தொல்லியல் திணைக்களத்தால் அடையாளப்படுத்தும் செயற்பாடானது உரிய வழிமுறைகளை பின்பற்றப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருப்பதை தன்னால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் “நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வரும் சூழலில், குறுகிய நலன்களுக்காக சிலரால் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான விடயங்கள் வேதனைக்குரியவை என சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இணக்க அரசியல் என்பது, இருப்பவற்றை பாதுகாத்து முன்னோக்கி நகர்வதாகவும் பிரச்சினைகளை இலகுவாக தீர்ப்பதற்கான பொறிமுறையாகவும் இருக்க முடியுமே தவிர, தவறான நடவடிக்கைகளை கண்டுகொள்ளாமல் கடந்து செல்வதாக இருக்க முடியாது” எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை அமைச்சரவை ஏற்றுக்கொண்ட நிலையில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, குறித்த விடயம் தொடர்பாக தொடர்ந்தும் அமைச்சரவைகளில் கலந்துரையாடி சரியான தீர்மானங்களை மேற்கொள்வதன் ஊடாக தவறுகள் இடம்பெற்றிருப்பின் திருத்திக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.(05)

# யுவதியை கூட்டிக்கொண்டு ஓடிய முதியவர் ஊர் மக்களால் தாக்கப்பட்டு படுகொலை!

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியில் 19 வயது யுவதியுடன் ஓட்டம் பிடித்த 55 வயது குடும்பஸ்தர் ஊர் மக்களின் தாக்குதலுக்கு இலக்காகி திங்கட்கிழமை உயிரிழந்துள்ளமை அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சங்குவேலி பகுதியைச் சேர்ந்த மரியதாஸ் ஜெயதாஸ் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர் அப்பகுதியைச் சேர்ந்த 19 வயது யுவதியொருவருடன் தொடர்பை ஏற்படுத்திவந்த நிலையில் அவர்கள் இருவரும் கடந்த 5 ஆம் திகதி தத்தமது வீட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் அவர்கள் இருவரையும் சேர்த்து வைப்பதாகக் கூறிய உறவினர்கள், அவர்களை ஊருக்கு வருமாறு அழைத்துள்ளனர்.

இதனையடுத்து இருவரும் திங்கட்கிழமை ஊருக்கு வந்தவேளை உறவினர்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் .

இதில் படுகாயமடைந்த மரியதாஸ் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் குறித்த யுவதியும் தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.08.2023இல் வெளியிடப்பெற்றது.